**EX/REC/26/09**

## கிழக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III பதவிக்கு காணப்படும் 53 வெற்றிடங்களுக்கு மாகாண திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண பொதுச்சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk ⟶ Exams ⟶ Online Application ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கமுடியும். 2026.07.16 மு.ப. 9.00 மணி தொடக்கம் 2026.08.14 பி.ப. 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் எழுத்துமூலப்பரீட்சை நடாத்தப்படும்.

**02. ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்:**

i. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

ii. இந்நியமனம் பெறுபவர்கள் நியமனத்திகதியிலிருந்து ஒரு வருட தகுதிகாண் சேவைக்காலத்திற்கு உட்படுத்தப்படுவர்கள் என்பதோடு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் ஆட்சேர்ப்புத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மூன்று (03) வருடங்களுக்குள் முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. இந்நியமனம் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு முதல் சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கட்டயமாக சேவையாற்ற வேண்டும்.

iv. நியமன கிடைக்கப்பெற்று 05 வருடங்கள் பூத்தியடைவதற்கு முன்னர் 18/2020ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் அவசியமாகும்.

v. குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத்தலைவரூடாக சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**03. பொதுவான தகைமைகள் :**

i. விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இவ் அறிவித்தலின் மூலம் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு அண்மிய ஐந்து (05) வருடத்தினை திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**04. வயதெல்லை :**

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் போது உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**05. கல்வித் தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :**

**5.1. கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்) மற்றும் கணிதம் / எண் கணிதம் / தூய கணிதம் / அடிப்படைக் கணிதம் / வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**5.2. அனுபவம் :**

i. கிழக்கு மாகாண பொதுச்சேவையில் நிரந்தர நியமனங்களைக் கொண்ட அந்த நியமனங்கள் நிரத்தரமாக்கப்பட்டிருக்கும் 10/2025 ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க ஆரம்ப நிலையிலுள்ள PL வகுதிக்கான சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் MN-01-2025 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் நிரந்தர நியமனம் ஒன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020ஆம் இலக்க சுற்றறிக்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டணைக்கு ஆளாகயிருத்தல் கூடாது. அதனை திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : எதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது எதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான எல்லையாக மேற்படி (ii)இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டுக் காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படமாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக / அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகயையும் மேற்படி (ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்து (05) ஆண்டுகள் கணக்கிலெடுக்கப்படமாட்டாது.

**06. சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25ஆம் திகதிய 10/2025இற்கு அமைவாக அரசாங்க நிர்வாகச் சற்றறிக்கையின் சம்பள தொகுதி MN 02-2025க்கு ஏற்ப மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III,II,I பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா. 48,470 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - 82,800/- ஆகும். ரூபா 53,870/-க்கு அப்பால் செல்வதற்கு தரம் IIக்கு பதவியர்வு பெறுவதும், ரூபா. 60,800/-க்கு அப்பால் செல்வதற்கு தரம் Iக்கு பதவியுயர்வு பெறுவதும் அவசியமாகும். மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற வேறு கொடுப்பனவுகளும் உரித்துடையதாகும்.

**07. ஆட்சேர்ப்பு முறை :**

i. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவையின் ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் மற்றும் எழுத்துப்பரீட்சை மூலம் திறமை அடிப்படை என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எவையும் வழங்கப்படமாட்டாது.

ii. மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் திறமை அடிப்படையில் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்படுவர்.

iii. தெரிவு செய்யப்படும் பரீட்சாத்திகள் எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெறுவதுடன் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 50% த்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**08. பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 1000/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை நிகழ்நிலையில் பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப்பரிதியினை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக்கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று காசுக்கட்டளை, முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## 09. பரீட்சை நிபந்தனைகள் :

i. பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை (online) ஆங்கில மொழி மூலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்கான அறிவித்தலை (Advertisement) தவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமா்ப்பிக்கப்படும் மென்பிரதியை செல்லுப்படியான பிரதியொன்றாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டுள்ளது என கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலலொன்றின் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலமாகவே அறிவிக்கப்படும்.

ii. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலம் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

iii. பரீட்சை நடைபெறும் குறித்த காலப்பகுதிக்கு முன்னர் விண்ணப்பதாரா்களுக்கு அனுமதி அட்டை தொடா்பாக குறுஞ்செய்தியினூடாகவும் (SMS), மின்னஞ்சலூடாகவும் (E-mail) அறிவிக்கப்படும். அனுமதி அட்டையைப் பரிசோதித்து மாற்றங்கள் ஏதும் இருப்பின் 026-2228368 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடா்பு கொண்டு விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தம் தொடா்பாக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iv. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தியொருவர் இருப்பின், மேலே குறிக்கப்பட்ட தொலைபேசி எண்ணுடன் தொடா்பினை ஏற்படுத்தி பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாக குறிப்பிட்டு விசாரிப்பது மிகவும் பொருத்தமானது.

v. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இறுதித் திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு எதிர்மறை விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

vi. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது அல்லது பொய்யான தகவல்களை வழங்கி பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.

## 10. விண்ணப்பிக்கும் முறை :

i. நிகழ்நிலையில் (online) விண்ணப்பித்த பின்னர் அதன் அச்சுப் பிரதியை (Printout) தரவிறக்கம் செய்து, தரவிறக்கம் செய்த விண்ணப்படிவத்தில் தமது கையொழுத்தினால் பூர்த்தி செய்ய வேண்டியதை பூர்த்தி செய்தும், பற்றுச்சீட்டின் முலப்பிரதியை உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டியும் தமது கையொப்பத்தை பதவிநிலை உத்தியோகத்தர் சான்றுபடுத்தி தினைக்களத்தலைவர் அவர்களால் உறுதிப்படுத்தி **''செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை''** என்ற முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னரோ அல்லது பின்னர் ஒரு வார காலத்திக்குள் எமக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை எதிர்கால தேவைக்காக தம்வசம் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

ii. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் EX/REC/26/09 என்பதை குறிப்பிடுவதோடு ''கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2026'' என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

## 11. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :

விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமா்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அல்லது சமர்ப்பிக்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

13. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி ஒருவர் தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
ஆ. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).
இ. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் முகத்தை மறைக்காது மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளும் வகையில் இருகாதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை மேற்பார்வையாளரினால் அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

14. **பரீட்சைக்கு தோற்றுதல்:**

i. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

ii. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை A4 தாளின் இருபக்கங்களையும் உபயோகித்து அச்சுப்பிரதியை (printout) எடுத்து இந்த அறிவித்தலின் 12ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பம் உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

iii. பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமான பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

15. **பரீட்சைத்திட்டம் :**

எழுத்துப்பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களை கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**எழுத்துப்பரீட்சை :**

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| உளச்சார்பு பரீட்சை | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைப்பரீட்சை | 100 | 02 ½ மணித்தியாலங்கள் | 40% |

**உளச்சார்பு :** இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்கணிதத்திறன் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், மற்றும் பொது நுண்ணறிவு என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

**மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைப்பரீட்சை:** இவ்வினாத்தாள் வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக்கோர்வை, மொழி மற்றும் கட்டுரை கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க கடிதத்தினை வரைதல், கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல், அலுவலக ஆவணங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் உடுக்கப்படும் விதம் மற்றும் அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய கடிதம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் தொடர்பிலான அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் போன்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை ஒருவரின் கடமைகள் குறித்து பரீட்சார்த்தியின்

அறிவினை சோதித்தல், நினைவூட்டல் நாட்குறிப்பு, பண உறுதிச்சீட்டுகள், நகர்வுத் தாள்கள், வரவுப் பதிவேடு, திகதியிடும் முத்திரை, உத்தியோகபூர்வ முத்திரை, மற்றும் தபால் பை ஆகியவற்றின் பயன்பாடு அலுவலகத்தில் பிரயோகிக்கப்படும் முறைமைகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

**குறிப்பு :**

ஒவ்வொரு வினாப்பத்திரம் தொடர்பில் கையெழுத்துக்களுக்கு சொற்களிலுள்ள எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். பரீட்சையின் மொத்தப்புள்ளிகளில் **ஆகக் குறைந்தது 50% த்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.** விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு விருப்பமான ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சை எழுத முடியும். போட்டிப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை அடிப்படை கண்டிப்பாகப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

**16. பரீட்சை நிலையம் :**

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள **பரீட்சை நகரங்களும் அவற்றின் இலக்கமும்**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| திருகோணமலை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| அம்பாறை | 03 |
| கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

17. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

18. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

19. இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவு தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் படி நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

**ஜே. லியாகத் அலி**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
16.07.2026